## ஈதுல் அல்ஹா பெருநாள்

ஈத்’ என்னும் அரபுச் சொல்லுக்கு திரும்பத் திரும்ப வருதல் என்பது பொருளாகும்.பெருநாள் ஆண்டு தோறும் திரும்பத் திரும்ப வருவதால் இப்பெயர் பெற்றது.

### மதீனாவில் திருவிழாக்கள்

பெருமானார் (ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மதீனா நகர் வந்தபோது மதீனா வாசிகள் இரு நாட்களை பெரும் பெருவிழாவாகக் கொண்டாடி மகிழ்ந்தனர். அதற்கான காரணங்களை வினவியபோது நாங்கள் பண்டு தொட்டு பொழுது போக்கிற்காக இவ்வாறு கொண்டாடி மகிழ்வது வழக்கம் என்றார்கள். அப்போது நபிகளார் (ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்,

### இரு பெருநாட்கள்

‘அல்லாஹ் அவ்விரண்டு ( பெருவிழாக்களு)க்கும் பதிலாக அவ்விரண்டைவிடச் சிறந்த திருநாட்களை பதிலாக வழங்கியுள்ளான். அவை: ஒன்று ஈதுல் அள்ஹா! (குர்பானி வழங்கும் தியாகத் திருநாள்!) மற்றொன்று ஈதுல் ஃபித்ர் ! (ஈந்து உவக்கும் ஈகைப் பெருநாள்!) என்று அறிவித்தார்கள் என அனஸ் (ரலியல்லாஹு அன்ஹு) தெரிவித்தார்கள்.

**(ஆதாரம் : அபூ தாவூது நஸயீ)**

ஈதுல் ஃபித்ர் ரமளான் மாதம் முழுவதும் இறைவனுக்காக நோன்பு நோற்றபின் ஷவ்வால் மாதம் முதல் பிறை பார்த்தபின்னர் கொண்டாடப்படும் பெருநாளாகும். ரமளான் மாதம் முழுவதும் உண்ணாமல் பருகாமல் பசித்திருந்து நோன்பு நோற்றவர்களுக்கு இறைவன் அளிக்கும் பரிசாக இந்த நோன்பு அமைந்துள்ளது.

ஈதுல் அள்ஹா இறை ஆணைப்படி நபி இப்றாஹீம் (அலை ஹிஸ்ஸலாம்) அவர்கள் தம் மகன் இஸமாயீல் (அலை ஹிஸ்ஸலாம்) அவர்களைப் பலியிட முன்வந்த இந்த நிகழ்ச்சியை நினைவு கூரும் வகையில் கொண்டாடப்படும் பெருநாளாகும்.

குர்பானி கொடுக்கப்படுவதால் ‘ஈதுல் அள்ஹா’ என்றும் ‘குர்பான் ஈத்’ என்றும் எகிப்து , துருக்கி போன்ற நாடுகளில் ‘ஈத் பைராம்’ என்றும், மாட்டை அறுத்துப் பலியிடுவதால் ‘பகர் ஈத்’ ( பக்ரீத்) என்றும் பல பெயர்கள் வழங்கப் படுகின்றன.

### பெருநாளை எவ்வாறு கொண்டாடுவது?

நோன்புப் பெருநாளுக்கும், ஹஜ்ஜுப் பெருநாளுக்கம் ஒரே விதிகள் தான்! என்றாலும் இரண்டிலும் சிறிது வேறுபாடுகள் உள்ளன. இரு பெருநாட்களைப் பற்றியும் அறிவது அவசியமாகும்.

1. பெருநாளன்று ஒவ்வொரு முஸ்லிமும் குளித்துப் புத்தாடை புனைவது ஸுன்னத்தாகும். ஆடை அணிவதில் ஆடம்பரம் கூடாது.
   தொழுகைக்குச் செல்லு முன் இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் குளித்துவிட்டுச் செல்வார்கள்.
   **(அறிவிப்பவர் : நாஃபிஹ் (ரலி யல்லாஹு அன்ஹு) ஆதாரம்: முவத்தா .**
   பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் சுன்னத் ஒவ்வொன்றையும் தவறாது கடைபிடிக்கும் இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஈதுப்பெருநாள் தொழுகைக்குப் புறப்ப:டுமுன் குளிப்பார்கள். அவர்கள் இருபெருநாட்களுக்கும் ஆடைகளில் மிக

அழகான ஆடையை உடுத்துபவர்களாக இருந்தார்கள். என இப்னுல் கையிம் (ரஹ் மதுல்லாஹி அலைஹி) அவர்கள் கூறுகிறார்கள்.

(ஸாதுல் மஆத் 1-442)

2. ஆண்கள் நறுமணம் பூசிக்கொள்வது நபிவழியாகும்.

3. பெண்கள் புத்தாடை அணியலாம். ஆனால் நறுமணம் போன்ற வாசனைத் திரவியங்கள் அவர்களுக்குத் தடை செய்யப்பட்டுள்ளன.

### 4. பெருநாள் தொழுகை ஸுன்னத் முஅக்கதா

பெருநாள் தொழுகை ஸுன்னத் முஅக்கதா- வலியுறுத்தப்பட்ட ஸுன்னத்தாகும். இது வாஜிப்- கட்டாயத்தொழுகை என்றும் சில இமாம்கள் கூறுகின்றனர். எதுவாயினும் இது முஸ்லிம்கள் நிறைவேற்ற வேண்டிய ஒரு முக்கியமான தொழுகையாகும். ஜாபிர் இப்னு ஸமூரா (ரலியல்லாஹு அன்ஹு) ஜாபிர் இப்னு ஸமூரா (ரலியல்லாஹு அன்ஹு) இதை தவறவிடாது தொழுவதற்கு ஆண் பெண் இருபாலரும் முக்கியத்துவம் வழங்கவேண்டும்.

### 5. பெண்கள் சிறுவர்களின் மீதும் கடமை

1. பெருநாள் தொழுகைகளுக்கு சிறுவர்களையும் அழைத்துச்செல்ல வேண்டும். நபி(ஸல்) அவர்களுடன் சிறுவராக இருக்கும் போது பெருநாள் தொழுகையில் கலந்து கொண்டதாக இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(ஆதாரம்:புகாரி-975)

### 6. தொழுத பிறகு உண்ணுவது

நோன்புப் பெருநாள் தொழுகைக்குச் செல்லும் போது பேரீத்தம் பழம் போன்ற உணவுகளை உண்டு விட்டுச் செல்வதும் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகைக்குச் செல்லும் போது எதுவும் உண்ணாமல் செல்வதும் ஸுன்னத்தாகும்.

நபி(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நோன்புப் பெருநாளன்று சாப்பிடாமல் (பெருநாள் தொழுகைக்காகச்) செல்ல மாட்டார்கள். ஈதுல் அள்ஹா பெருநாளில் தொழாதவரை சாப்பிடமாட்டார்கள் என இப்னு புரைதா தன் தந்தையின வாயிலாக அறிவிக் கிறார்கள்.

( ஆதாரம்: அஹ்மத்இ திர்மிதி,இப்னு ஹிப்பான்)

### 7. தக்பீர் சொல்லுவது!

ஆண்கள் சப்தமாக தக்பீர் சொல்லுவதும் பெண்கள் மெதுவாக தக்பீர் சொல்லுவதும் ஸுன்னத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் வழியாகும்.

‘நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பெருநாள் அன்று தமது வீட்டை விட்டுப் புறப்படுவதி லிருந்து தொழுமிடம் வரும் வரை தக்பீர் சொல்பவர்களாக இருந்தார்கள்’ என இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நோன்புப் பெருநாளின்போது பிறை பார்த்த இரவிலிருந்து பெருநாள் அஸர் வரை தக்பீர் சொல்வது சுன்னத்தாகும்.

ஹஜ்ஜுப் பெருநாளின் போது பிறை ஒன்பது பஜ்ரிலிருந்து 13 அஸர் வரை தக்பீர் கூறுவது சுன்னத்தாகும்.பிறை ஒன்று முதல் 13 அஸர் வரை இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் தக்பீர் கூறுபவர்களாக இருந்தார்கள். எனவே ஒன்று முதல் 13 அஸர் வரை தக்பீர் சொல்லலாம்.

தக்பீர் சொல்லும் முறை

**الله أكبر الله أكبرلااله الا الله والله أكبر الله أكبر ولله الحمد الله أكبر الله أكبر كبيرا والحمد لله كثيرا وسبحان الله بكرة وأصيلا لا اله الا الله ولانعبد الا اياه مخلصين له الدين ولو كره الكافرون لااله الا الله وحده وصدق وعده ونصر عبده وأعز جنده وهزم الأ حزاب وحده لااله الاالله والله اكبر الله اكبر ولله الحمد**

**8. ஈத் தொழுகைக்காக நடந்து செல்வது**

பெருநாள் தொழுகைக்காக நடந்து செல்வது நபி வழியாகும் என அலீ (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகிறார்கள் .

**(ஆதாரம் திர்மிதி)**

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஈத் தொழுகைக்கு நடந்தே சென்று நடந்தே திரும்பி வருவார்கள். அறிவிப்பவர்: அப்துர்ரஹ்மான் பின் ஸஃது(ரலியல்லாஹு அன்ஹு)

**ஆதாரம்: இப்புனுமாஜா(1070)**

ஆகவே, ஈத் தொழுகைக்கு நடந்து செல்வதும், நடந்தே திரும்பி வருவதும் ஸுன்னத்தாகும்.

**9. ஈத் தொழுகையின் நேரம்.**

சூரியன் உதயமாகி தொழுகை தடுக்கப்பட்ட நேரம் முடிந்த பிறகு பெருநாள் தொழுகை தொழுவது நபிவழியாகும்.

**(புகாரி,அபூதாவூது,இப்னு மாஜா, ஹாக்கிம்)**

குறிப்பு: பொழுது புலர்ந்து சுமார் இருபது நிமிடங்கள் வரை தடுக்கப்பட்ட நேரமாகும்.அதன் பின்னர் தொழலாம்.

**10. ஒருவழியாகச் சென்று மறு வழியாக திரும்புவது**

பெருநாள் தொழுகைக்குச் செல்லும்போது ஒரு வழியாகச்சென்று மறுவழி யாகத் திரும்புவது திரு நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் வழியாகும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பெருநாள் தொழுகையிலிருந்து (திரும்பும் போது சென்றவழியாக இல்லாமல்) வேறு வழியாக திரும்பி வருவார்;கள். என ஜாபிர்(ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

**(ஆதாரம்: புகாரி)**

**11. அதான்,இகாமத் கிடையாது.**

இரு பெருநாள் தொழுகைகளுக்கும் அதான் இகாமத் கிடையாது என ஜாபிர் இப்னு ஸமுரா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நபி(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)அவர்கள் அதானும் இகாமத்தும் இல்லாமல் பெருநாள் தாழுகையைத் தொழுதுள்ளார்கள். அறிவிப்பவர்:இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹு)

**ஆதாரம்: அஹ்மத், முஸ்லிம், திர்மிதி,நஸயீ, இப்னு மாஜா.**

நான் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடன் ஒருமுறையல்ல., இருமுறையல்ல. பாங்கும் இகாமத்துமின்றி(பலமுறைகள்) பெருநாள் தொழுகையைத் தொழுதிருக்கிறேன். (அறிவிப்பவர்: ஜாபிர் இப்னு ஸமுரா (ரலியல்லாஹு அன்ஹு)

**(ஆதாரம்: முஸ்லிம், அபூதாவூது, திர்மிதி,அஹ்மத்)**

**12. பெருநாள் தொழுகைக்கு முன் பின் ஸுன்னத் கிடையாது.**

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நோன்புப் பெருநாள் அன்று புறப்பட்டுச்

சென்று இரண்டு ரக்அத்கள் தொழுதார்கள்.அதற்கு முன்னும் பின்னும் (அவர்கள் வேறு எந்த தொழுகையையும்) தொழவில்லை. என்று இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அவர்களுடன் பிலால் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களும் இருந்தார்கள்.

**ஆதாரம் புகாரி – 989.**

## 13. பெருநாள் தொழுகையும் தக்பீர்களும்

நோன்புப் பெருநாள்,ஹஜ்ஜுப்பெருநாள் ஆகிய இரண்டு பெருநாட்களிலும் ஆண்களும் பெண்களும் இந்த சிறப்புத் தொழுகையை நிறைவேற்றவேண்டும்.

## 14.பெருநாள் தொழுகை இரு ரகஅத்களாகும்.

முதல் ரகஅத்தில் வஜ்ஜஹ்து ஓதிய பிறகு ஏழு தக்பீர்கள் கூறுவதும். பிறகு இரண்டாம் ரகஅத்தில் நிலைக்கு வந்த பின்பு ஐந்து முறை தக்பீர் கூறுவதும் சுன்னத்தாகும். ஒவ்வொரு தக்பீர் கூறும் போதும் இரு கைகளை உயர்த்தி கட்டிக்கொள்வதும் மற்றும் இந்த தக்பீர்களுக்கிடையில் “ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்துலில்லாஹி வலா இலாஹ இல்லல்லாஹு வல்லாஹு இக்பர்” எனச் சொள்வதும் சுன்னத்தாகும். முதல் ரக்காஅத்தில் “ஸப்பிஹிஸ்ம” சூராவும் இரன்டாவது ரக்காஅத்தில் “ஹல் அதாக” சூராவும் ஓதுவது சுன்னத்தாகும். முதலாவது ரக்காஅத்தின் ஆரமபத்தில் ஏழு தக்பீர்களைச் செல்லாமல் அல்லது இரண்டாவது ரக்காஅத்தின் ஆரமபத்தில் ஐந்து தக்பீர்களைச் செல்லாமல் பாத்திஹா ஓத ஆரம்பித்துவிட்டால் அந்த விடுபட்ட தக்பீர்களைப் பின்பு கூறுவது சுன்னத் அல்ல . இது போன்றே முதலாவது ரக்காஅத்தின் ஆரமபத்தில் ஏழு தக்பீர்களை விட்டுவிட்டால் இரண்டாவது ரக்காஅத்தில் சேர்த்து கூறுவதும் ஸுன்னத் ஆகாது.

### ஏழும் ஐந்தும் தக்பீர்கள்!

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் (ஈதுல்பித்ர்,ஈதுல் அள்ஹா) ஆகிய இரு பெருநாள் தொழுகைகளில் கிராஅத் ஓதுவதற்கு முன் முதல் ரக்அத்தில் ஏழு தக்பீர் களும்,இரண்டாம் ரக்அத்தில் கிராஅத் ஓதுவதற்கு முன் ஐந்து தக்பீர்களும் கூறுவார்கள். அறிவிப்பவர்:அம்ர் இப்னு அவ்ஃப் (ரலியல்லாஹு அன்ஹு),

**ஆதாரம்: திர்மிதி.**

### சூராக்கள்

பெருநாள் தொழுகையில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் காஃப் என்ற அத்தியாயத் தையும், கமர் என்ற அத்தியாயத்தையும் ஓதியிருக்கிறார்கள். சிலவேளை அஃலா என்ற அத்தியாயத்தையும், காஷியா என்ற அத்தியாயத்தையும் ஓதியுள்ளார்கள். அறிவிப்பவர்: அபூவாகித் (ரலியல்லாஹு அன்ஹு)

**ஆதாரம்: அஹமத், முஸ்லிம், திர்மிதி,நஸயீ,இப்னு மாஜா.**

இரு பெருநாள் தொழுகைகளில் “ஸப்பிஹிஸ்ம ரப்பிகல் அஃலா ” என்ற அத்தியாயத்தையும், “ஹல் அதாக்க ஹதீஸுல் காஷயா ” என்ற அத்தியா யத்தையும் ஓதுவார்கள் . அறிவிப்பவர்: ஸமுரா (ரலியல்லாஹு அன்ஹு)

**ஆதாரம்: அஹ்மத்,தப்ரானி.**

### குத்பா உரை கேட்பது

இரு பெருநாள் தொழுகைகளுக்குப்பின் இரண்டு குத்பாக்களை ஓதுவது ஸுன்னத்தாகும் ஜும்ஆ குத்பாவின் ஷர்த்துக்கள் ஃபர்ளுகள் அனைத்தும் இவற்றின் குத்பாக்களிலும் அவசியமாகும். பெருநாள்களின் முதல் குத்பாவை தொடர்ச்சியான ஒன்பது தக்பீர்களைக்கொண்டும் இரண்டாவது குத்பாவை தொடர்ச்சியான ஏழு தக்பீர்களைக் கொண்டும் தொடங்குவதும் பெருநாள் குத்பாவின் சொற்றொடர்களுக்கிடையே தக்பீர் கூறுவதும் ஸுன்னத்தாகும்.

தொழுகை முடிந்த பிறகே குத்பா உரை நிகழ்த்தவேண்டும்.

நபி(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ,அபூபக்ர் ( ரலியல்லாஹு அன்ஹு),உமர்; (ரலியல்லாஹு அன்ஹு) ஆகியோர் குத்பாவுக்கு முன்பே இரண்டு பெருநாள் தொழுகைகளை நிறைவேற்றுவார்கள். அறிவிப்பவர்: இப்னு உமர் ( ரலியல்லாஹு அன்ஹு)

**ஆதாரம்: புகாரி,,முஸ்லிம், திர்மிதி,நஸயீ.**

**குத்பா உரையை** ஜும்ஆ உரையைப் போன்று பெருநாள் குத் ;பா உரையையும் காது தாழ்த்திக் கேட்பது அவசியமாகும். இன்று இதன் முக்கியத்துவம் புரியாது பலர் குத்பாவைக் கேட்காது எழுந்து சென்று விடுகின்றனர்.

### 15. மார்க்கத்திற்கு முரணானவை நிகழாது காத்தல்

‘பெருநாள் என்றாலே பொழுது போக்கும் நாள்! ஆரவாரமிக்க நாள்! உல்லாசமாகப் பொழுதைக் கழிக்கும் நாள்’ எனக் கருதிக் கொண்டு நம்மில் பலர் வேடிக்கை விளையாட்டுகளிலும், கேளிக்கைகளிலும், திரைப்படங்களைப் பார்ப்பதிலும் பொழுதைக்கழிக்கின்றனர்.

மார்க்கத்தில் அனுமதிக்கப்படாத நிகழ்ச்சிகள் , வைபவங்களை தவிர்த்து மாண்பார் துல்ஹஜ்ஜின் பேறுகள் அனைத்தையும் பெறுவதற்கும் , அந்நாட்களில் அதிகமதிகமாக வணக்கங்களில் மற்றும் குடும்பத்தோடு கூடி உரவாடுதல் போன்ற வணக்கங்களில் ஈடுபடுவதற்கும் வல்லான் அல்லாஹ் அருள் புரிவானாக! ஆமீன் யா ரப்பல் ஆலமீன்.

www.bathusha.com
Tamil Islamic Online Radio 24h

**உண்மையும் நன்மையும் உன்னிலும் என்னிலும் உண்டாகட்டும்**
**AL ALIM S.A.M.SEYED JAHAN MOWLANA HUSAINY JALALIY**
**BATHUSHA.COM**